சின்னம் சிறு வேலவா உன்னை
சிற்றிடையில் வைத்தணைக்க
என்ன தவம் செய்து வந்தாளோ - எந்தன் தாய்

அம்மையப்பன் செய்தவத்தால் அருளும் சிவ ஸுப்ரமண்யா
இம்மைப்பயன் தானளிக்க எங்கல் குலம் கார்த்து நிற்க

முன்னமொரு பொய்கை தன்னில் மூவிரு பெண்களும் காண தன்னம் தனி மலரில்
தவழ்ந்து வந்தாய்
பின்னும் பெரும் பசியால் பேச வகை அறியாது
விம்மி விம்மி அழுது வாடலுற்றாய்
அம்மை உமையாள் அறிந்தாள் அமுது தந்தாள்
முன்னவரும் உண்மை மொழிந்தார் - உலகம் உய்ய
விண்ணவரும் மண்ணவரும் வேதம்சொல்லும் நான் முகனும்
எண்ணரிய மாலவனும் எங்கள் குலம் நல்லதென (தன்னம்)

அம்புலி கண்டாட வென்று அன்று கை சப்பாணி கொட்ட
தந்தி முகன் தம்பியுடன் அடிப்பாடினாய்
தும்புருவும் நாரதனும் கும்பமுனி யேழ்முனியும்
அம்பிகையும் சம்புவுடன் ஆடி மகிழ்ந்தாய்
நந்தியொடு ப்ருங்கி மகிழ நால்வரொடு
சந்திரனும் சூரியனும் கண்டு மகிழ
அம்புலியில் உள்ளவர்கள் கானவர்கள் தானவர்கள்

எண்திசையில் உள்ளவர்கள் எங்கள் குலம் நல்லதென

வள்ளிக்கு வாய்த்தவனே வா வா ஷண்முகா
என் உள்ளம் கவர்ந்தவனே வா வா ஷண்முகா